**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 198** **நாள் : 05.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைக்கான மதிப்பீடு – 2019 குறித்த சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

மத்திய வீட்டு வசதித் துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சகம் சார்பில் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் நாடு முழுவதும் உள்ள அனைத்து நகர உள்ளாட்சி அமைப்புகளில் “தூய்மைக்கான மதிப்பீடு” செய்யப்பட்டு, பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் ஒவ்வொரு நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தரவரிசை (Rank) வழங்கப்படுகிறது.

தற்பொழுது, தூய்மைக்கான மதிப்பீடு 2019 நடைபெற உள்ளது. இதில் தேசிய தர வரிசை பட்டியலில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கும் மேற்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 500 நகர உள்ளாட்சி அமைப்புகள் கலந்து கொள்ள உள்ளன. இந்த தரவரிசைக்கான போட்டியில் 1250 மதிப்பெண்கள் பொதுமக்களின் கருத்துகளுக்கு வழங்கப்பட உள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கோடம்பாக்கம் மண்டலம், தியாகராய நகரில் உள்ள சாரதா வித்யாலயா மாடல் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தூய்மை இந்தியா திட்டம், தூய்மைக்கான மதிப்பீடு மற்றும் டெங்கு காய்ச்சல் சம்பந்தமாக விழிப்புணர்வு முகாம் இன்று (05.12.2018) நடத்தப்பட்டது. இந்த முகாமில் 1300 மாணவியர்கள் மற்றும் 25 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதில் சிறப்பு நிகழ்வாக, தூய்மைக்கான மதிப்பீடு குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் SS 2019 (Swachh Survekshan 2019) மற்றும் CLEAN CHENNAI என்ற எழுத்து வடிவில் மாணவியர்கள்அனைவரும் நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இச்சிறப்பு விழிப்புணர்வு முகாமில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், செயற்பொறியாளர் V.சின்னதுரை, உதவி செயற்பொறியாளர், எக்ஸ்நோரா தலைவர் கோவிந்தராஜ், பசுமை படை தங்கராஜ், தலைமையாசிரியை B.M. ஜெயந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**